## மெத்தனால்' – மெத்தனம் வேண்டாம்

வருடம் 1937 அக்டோபர் 1–ம் தேதி அப்போதைய மதராஸ் மாகாணத்தில் சேலம் மாவட்டத்தில் தான் முழுமையான மதுவிலக்கு அமலுக்கு வந்தது. மதுவிலக்கு சட்டம் 1937 (மதராஸ் சட்டப் பிரிவு X 1937) தனித்தன்மை வாய்ந்த சட்டம் சமுதாய நல சட்டங்களின் இந்திய நாட்டிற்கே முன்னோடி. இந்த சட்டம் முழுமையாக முதலில் நடைமுறைப்படுத்தப்பட்ட மாவட்டம் என்ற பெருமைக்குரியது சேலம் மாவட்டம். அப்போதிருந்த மாவட்ட ஆட்சியர் திரு. டிக்ஸன் மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டு புதிய சட்டத்தை முறையாக அமல்படுத்துவது மட்டுமன்றி பொதுமக்களை ஊக்குவித்து முழுமையாக ஈடுபட செய்து மாவட்டத்திற்குட்பட்ட எல்லா அரசு துறைகளின் ஒருங்கிணைந்த ஒத்துழைப்போடு இந்த சமுதாய நல சட்டத்திற்கு புது வடிவம் கொடுத்தார் என்பது வரலாறு. அப்போது தருமபுரியும், கிருஷ்ணகிரியும் சேலம் மாவட்டத்தோடு இணைந்திருந்தது. அத்தகைய சிறப்பு வாய்த மாவட்டத்திலிருந்து உருவாக்கப்பட்ட கிருஷ்ணகிரியில், சமீபத்தில் விஷச் சாராயம் ஏழைகளின் உயிர்களை பலி கொண்டது என்பது வேதனைக்குரியது.

1998–ம் வருடம் தருமபுரி மாவட்டம் சூலகிரியில் விஷச் சாராயத்திற்கு 49 பேர் பலியானார்கள். மெத்தனால் என்ற இரசாயன திரவத்தை ஏற்றி வந்த டேங்கர் லாரி பழுதடைந்து சூலகிரியில் நின்ற போது, டேங்கரில் இருந்து கசிந்த திரவத்தை எரி சாராயம் என்று நினைத்து மக்கள் எடுத்துச் சென்று குடித்ததால் இந்த விபரீதம் ஏற்பட்டது என்பது விசாரணையில் தெரிய வந்தது. உயிர் பிழைத்தவர்கள் பலர் பார்வையிழந்தனர். உடல் உபாதைகளுக்கு ஆளாகி நடைபிணமாக வாழ்ந்து கொண்டு இருக்கின்றனர்.

விஷ சாராய நிகழ்வுகளை ஆராய்ந்தால் அதிகமாக மெத்தனால் என்ற கொடிய நச்சுப் பொருளை உட்கொண்டதால் ஏற்பட்டது என்று தெளிவாகிறது. 1991–ல் இருந்து இன்று வரை 60 விஷ சாராய சம்பவங்களில் 40 நிகழ்வுகளில் மெத்தனால் என்ற திரவத்தை சாராயம் என்று நினைத்து உட்கொண்டதால் திடீர் சாவு ஏற்பட்டுள்ளது.

1976–ல் தான் சென்னை அருகே திருவெற்றியூர் அருகில் நடந்த சம்பத்தில் ஒரே சமயத்தில் 118 நபர்கள் மாண்டனர்.

மெத்தனால் என்பது சாராயம் அல்ல. மெத்தனால் ஒரு விதமான மதுபான வகை என்ற தவறான எண்ணத்தில் அருந்துவதால் பெரும் பாலான சாவுகள் நிகழ்ந்துள்ளன. மெத்தனால் என்பது கார்பன் மற்றும் ஹைடிரஜன் உள்ளடங்கிய பழம் படிம எரி பொருளிலிருந்து தயாரிக்கப்படுகின்ற ஒரு பெட்ரோலிய வகை திரவமாகும். இது மீதைல் ஆல்கஹால் (CH3OH) எனப்படும். மெத்தனால் ஃபார்மால்டிஹைடுகள், அசிட்டிக் அமிலம் மற்றம் பல்வேறு இரசாயனத் தயாரிப்புகளுக்குப் பயன்படுகிறது. இதனால் தான் மதுவிலக்கு சட்டத்தின் தடை செய்யப்பட்ட பொருளாக இருந்தது 1984–ல் நீக்கப்பட்டு, பல ஆண்டுகளாக மெத்தனால் தொழிற் துறை பொருளாக கருதப்பட்டு வந்தது. இரசாயன தொழிற்சாலைகளுக்கு முக்கியமான மூலப் பொருள், ஆயினும் நச்சுப் பொருள் என்பதால் பாய்ஸன் சட்டம் (Poison Act) படி வைத்திருப்பது, உபயோகப்படுத்துவது, எடுத்துச் செல்வதற்கு உரிமம் பெற வேண்டும்.

2001–ம் ஆண்டு கடலூர் மாவட்டம் புதுப்பேட்டையில் நிகழ்ந்த சாராயச் சாவு சம்பவத்தில் 50 பேர் உயிரிழந்தனர். நூற்றுக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டனர். இதன் பிறகு மெத்தனால் மது விலக்கு சட்டத்தின் ஆளுகைக்கு கொண்டு வரப்பட்டது. உரிமம் இல்லாது இந்த திரவத்தை வைத்தல் மதுவிலக்கு சட்டப்படி குற்றமாகும் என்று பிப்ரவரி 2002–ல் ஆணையிடப்பட்டது. மெத்தனால் மதுவிலக்கு சட்டத்தின் கீழ் கடுமையாக கண்காணிக்கப்பட்டதால், 2002–ல் மேற்கொண்டு சம்பவம் நிகழவில்லை.

மெத்தனால் திரவத்தின் விஷத் தன்மை பற்றியும் அதை நிர்வகிக்கும் சட்டம் மற்றும் விதிகள் பற்றி பெருவாரியான காவல் துறையினருக்கும் தெரியாத நிலையில் பொது மக்களுக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை. மெத்தனால் என்பது தெளிவான, நிறமில்லாத அசையக் கூடிய எளிதில் ஆவியாகித் தீப்பற்றக் கூடிய ஒரு திரவம். விஷத் தன்மை உடையது. எளிதில் தண்ணீரில் கரையக் கூடியது. நச்சுத் தன்மையுள்ளதால்

எல்லா உறுப்புகளிலும் விஷம் கலந்து குணப்படுத்த முடியாத நிலைக்கு கொண்டு போய்விடும். மெத்தனால் கண் பார்வையை வெகுவாக பாதிக்கக் கூடியது. மெத்தனால் உட்கொள்வதால் இருதயம், ஈரல், குடல் ஆகிய முக்கிய உறுப்புகள் சேதமடைகின்றன. பட்ட இடத்தில் எரிச்சல் தரக் கூடியது. இதன் நச்சுத் தன்மையை எளிதில் களைய முடியாததால் இது முழுமையான நஞ்சு என்று சொல்லப்படுகிறது. மெத்தனால் ஆபத்தானது. எளிதில் தீப்பற்றக் கூடியது. இதனால் தான் 300 லிட்டருக்கு மேல் இருப்பு வைத்திருப்பதற்கு மத்திய அரசின் வெடி மருந்து கட்டுப்பாட்டு அலுவலரிடமிருந்து உரிமம் பெற வேண்டும். இடம் விட்டு இடம் எடுத்துச் செல்லும் போது மெத்தனாலுடன் அதனை உற்பத்தி செய்த விஞ்ஞானக் குழுவின் பரிந்துரையின் முத்திரை காகிதத்துடன் இருக்க வேண்டும். பொருளின் பாதுகாப்புப் புள்ளி விவரப்பட்டியலின் நகல் அதனுடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

மெத்தனால் உட்கொண்டதால் பாதிக்கப்பட்டவருக்கு உடனடி முதலுதவிக் கொடுத்து அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்க வேண்டும். பாதிக்கப்பட்டவரின் ஆடைகளை உடனே மாற்ற வேண்டும். உடலில் பட்டிருந்தால் பாதிக்கப்பட்டப் பகுதியை ஓடும் தண்ணீரால் சுத்தம் செய்ய வேண்டும். தண்ணீரைக் கொண்டு கொப்பளித்து உமிழச் செய்ய வேண்டும். மருத்துவமனை அருகில் இல்லா விட்டால் அதிகமாக தண்ணீரைக் குடிக்க செய்து வயிற்றில் உள்ள மெத்தனாலை நீர்த்த நிலைக்கு கொண்டு வந்து, பாதிக்கப்பட்டவரை வாந்தி எடுக்க செய்து கதகதப்பான சூழ்நிலையில் படுக்க வைக்க வேண்டும்.

விஷச் சாராயத்தால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்ற தகவல் தெரிந்தவுடன் அசம்பாவிதம் நிகழ்ந்து விட்டதே என்று அங்கலாயக்காமல், காவல்துறையினர் துரிதமாக செயல்பட்டு பாதிக்கப்பட்டவர்களை கண்டுபிடித்து எல்லோருக்கும் கட்டாயமாக மருத்துவ சிகிச்சைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இம்மாதிரி நேர்வுகளில் அதன் வீரியத்தை குறைத்து மதிப்பிடும் நிலை காவல்துறையினரிடம் உண்டு. அதிகமான

மக்கள் பாதிக்கப்பட்டவர்கள் என்றால் பரபரப்பான செய்தியாகி சரக காவல் துறையினரை பாதிக்கும் என்பதாலேயே அசம்பாவிதத்தின் உண்மை நிலையை குறைத்திடும் போக்கு இருக்கும். ஆனால் இது மிக ஆபத்தானாது.

மெத்தனால் லாரி டேங்கர்களில் எடுத்துச் செல்லும் போது கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள், ஓட்டுனர்களுக்கு தகுந்த பயிற்சி, அவர்களின் பணியைப் பற்றிய விழிப்புணர்வு ஆகியவை காவல்துறையினரால் நடைமுறைப் படுத்த வேண்டும். அதே போல் மெத்தனால் உபயோகிக்கும் தொழிற்சாலைகள் எங்கு உள்ளன என்பது தெரிவு செய்து அவை உபயோகப்படுத்தப்படும் இடங்களில் கிரமப்படி பாதுகாப்போடு வைக்கப்படுள்ளதா என்பதை தணிக்கை செய்ய வேண்டும். இதில் சிறிதேனும் தவறு நேர்ந்தால் விளைவுகள் விபரீதமாக முடியும். திருவள்ளூர் மாவட்டம் புட்லூர் என்ற இடத்தில் 1998–ம் ஆண்ட நடந்த சம்பவம் – ஒரு தொழிற்சாலையிலிருந்து திருடப்பட்ட மெத்தனால், சாராயம் என்று உட்கொள்ளப்பட்டதால் ஏற்பட்ட விளைவு 12 உயிர்களை பலி கொண்டது. மெத்தனால் உபயோகிக்கும் தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் 114 உள்ளன. சிறிய அளவில் உபயோகிக்கும் தொழிற்சாலைகள் சுமார் நூறு இருக்கும். சென்னை மற்றும் புற நகர் பகுதிகளில் சுமார் 75 தொழிற்சாலைகள் உள்ளன. மெத்தனால் உபயோகிக்கும் தொழிற்சாலைகளில் அங்கு வேலை செய்யும் எல்லோருக்கும் விஷத்தன்மையான பொருள் எங்கு வைக்கப்பட்டிருக்கிறது என்பது தெரிந்திருக்க வேண்டும். சம்பந்தப்பட்ட மேலாண்மை அதிகாரிக்கு மெத்தனால் மூலம் விரும்பத்தகாத செயல்கள் நடந்தால் அவர்கள் தான் பொறுப்பு என்று உணர்த்தப்பட வேண்டும்.

மது விலக்கு சட்டத்தில், 1998–ல் பல திருத்தங்கள் கொண்டு வரப்பட்டு தண்டனை கடுமையாக்கப்பட்டது. விஷச் சாராயம் கையாளுதலுக்கு ஆயுள் தண்டனை வரை கொடுக்க வழி வகை செய்யப்பட்டுள்ளது. மேலும் மதுவிலக்கு சட்டம் பிரிவு 52 உட் பிரிவு (இ) –ல் சொல்லியபடி தொடர்ந்து மதுவிலக்கு குற்றம் புரிதலில் மூன்று முறையும் அதற்கு மேலும் தண்டிக்கப்பட்டிருந்தால் அவர்களது இருப்பிடத்திலிருந்து இரண்டாண்டு

வரை விலக்கி வைக்கவும் ஊருக்கு நுழைய முடியாத உத்தரவு கோர்ட் மூலம் பிறப்பிக்க முடியும். இது மிகவும் வலிமை வாய்ந்த தண்டனை. 1999–ல் இருந்து 2001 வரை இரண்டு வருடங்களில் சுமார் 1000 பெருங்குற்றவாளிகள் மீது இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதால் மதுவிலக்கு குற்றங்கள் கணிசமாக கட்டுப்பாட்டுக்குள் வந்தன.

மதுவிலக்கு சட்டம் ஒரு முக்கியமான சமுதாய நலச் சட்டம். இதை முழு ஈடுபாடுடன் அமல்படுத்துவது காவல்துறையின் தலையாய கடமை. எவ்வாறு, எந்த வகையில், எந்த பிரிவு மூலம் இந்த சட்டத்தை அமல்படுத்துவது என்பது ஒவ்வொரு கால கட்டத்திலும் பல மாற்றங்களை கண்டுள்ளது. அமலாக்கக் காவல் பிரிவு, அப்காரி அமலாக்கப் பிரிவு, உள்ளூர் காவலர் சில சமயம் தனிப் பொறுப்புடனும் அல்லது ஒருங்கிணைந்த பொறுப்புடனும் இந்த சட்டம் அமல்படுத்தப்பட்டது. மேலே குறிப்பிட்டுள்ள எந்த துறைக்கு பிரதான பொறுப்பு கொடுத்தால் அமலாக்கம் சிறப்பாக இருக்கும் என்பது சர்ச்சைக்குரியது. ஒவ்வொரு செயல்முறையும் குறை–நிறை அடங்கியது. உள்ளூர் போலீஸாருக்கு சட்டம் ஒழுங்கு சம்பந்தப்பட்ட பிரச்சனைகளில் கவனம் செலுத்த வேண்டியதை கருத்தில் கொண்டு பிரத்யேக அமலாக்கப் பிரிவு உருவாக்கப்பட்டது. ஆனால் சில இடங்களில் உள்ளூர் போலீஸாரின் ஆதரவோடு கள்ளச் சாராயத் தொழில் நடைபெறுகிறது என்ற குற்றச்சாட்டு பரவலாக எழுந்தது. எந்த ஒரு சட்ட விரோத செயலும் உள்ளூர் காவல்துறையினரின் கவனத்தை மீறி நடைபெற முடியாது என்பது எதிர்க்க முடியாததொன்று. இத்தகைய சட்ட மீறல், ஒன்று போலீஸாரின் தயவோடும், ஆதரவோடும் நடைபெறும். அல்லது அவர்களது மெத்தன, அசட்டையான, கடமை தவறுதலால் நிகழும். இரண்டும் கடும் கண்டனத்துக்குரியது.. மேலும் சாராயம் காயச்சுவதற்கு நீர் ஆதாரம் தேவை. ஆற்றுப் படுகை, மலைப் பகுதிகளில் சுணை நீர், ஏரி புறம்போக்கு, காட்டுப் பகுதி போன்ற இடங்களில் மக்கள் நடமாட்டம் அதிகம் இல்லாத சமயங்களில் சாராயம் காய்ச்சும் சட்ட விரோத செயல் நடைபெறும். காவல்துறை,

வருவாய்துறை, பொதுப்பணித் துறை, வனத்துறை, ஒருங்கிணைந்து நடவடிக்கை எடுத்தால்தான் இத்தகைய குற்றங்களை களைய முடியும் என்பதால் இந்தத் துறை சார்நிலை அலுவலர்களுக்கு முக்கிய பொறுப்பு என்று அறிவுறுத்தும் அரசாணை 1992–ல் வெளியிடப்பட்டது.

அமலாக்கப் பிரிவின் தற்போதைய ஆணைப்படி கூடுதல் காவல்துறை இயக்குநர் தலைமையில் இயங்குகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவுகள் உண்டு. அமலாக்கப் பிரிவு மற்றும் உள்ளூர் போலீஸார் ஒருங்கிணைந்து மதுவிலக்கு சட்டத்தை அமல்படுத்த வேண்டும். மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளருக்கு அமலாக்குவதில் முக்கிய பொறுப்பு இருக்கிறது. மாவட்ட அளவில் ஏனைய துறைகளின் ஒருங்கிணைப்பை மாவட்ட ஆட்சியர் உறுதி செய்ய வேண்டும். ஏழ்மை காராணமாக மதுவிலக்கு குற்றங்களில் சிக்கி திருந்தி வாழ விழைபவர்களுக்கு புனர் வாழ்வு கொடுக்கும் செயலாக்கம் மாவட்ட ஆட்சியர் மூலம் நிறைவேற்றப்படுகிறது.

மாநில அளவில் மது விலக்கு குற்றங்கள் நடைபெறும் இடங்களை தெரிவு செய்து பெருமளவில் மதுவிலக்கு வேட்டை நடத்துவது, மாவட்டங்களிடையே ஒருங்கிணைப்பு நடவடிக்கை உறுதி செய்தல், எரி சாராயம், மெத்தனால் கடத்தப்படுவதை சோதனைச் சாவடிகள் மூலம் கண்காணித்தல், அண்டை மாநிலங்களான கர்நாடகா, ஆந்திரா, கேரளா, பாண்டிச்சேரியில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு ஆலோசித்து அமலாக்கத்தை மேம்படுத்துதல், மதுவிலக்கு ஆணையாளரோடு இணைந்து நடவடிக்கை எடுத்தல், மதுவிலக்கு சம்பந்தப்பட்ட அரசு ஆணைகள் நல்ல முறையில் செயல்படுத்துவதை உறுதி செய்தல், எல்லாவற்றிற்கும் மேலாக மக்களிடையே “மது உடலைக் கெடுக்கும்–குடியைக் கெடுக்கும்” என்ற விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல். இந்த அனைத்து பொறுப்புக்களையும் நிறைவு செய்ய வேண்டிய கடமை அமலாக்கப் பிரிவின் தலைமைப் பொறுப்பு வகிக்கும் கூடுதல் காவல் துறை இயக்குரைச் சாரும்.

கள்ளச்சாராய ஒழிப்பு என்பது தொடர் நடவடிக்கை. பல இடங்களில் கள்ளச்சாராய ஒழிப்பு நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட்ட நிலையிலும், சில இடங்களில் இக்குற்றங்கள் தலையெடுத்து சமுதாய சீர்குலைவிற்கு அடித்தளமாகிறது. பல சட்டம் ஒழுங்கு பிரச்சனைகளுக்கு வித்திடுவது கள்ளச்சாராயம். ஒரு காவல் நிலைய சரகத்தில் மதுவிலக்குக் குற்றங்கள் ஒழிக்கப்பட்டால், மற்ற சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் வெகுவாக குறைந்து காவல் கண்காணிப்பு (Policing) எளிதாகிறது.

கடமை தவறுதல், குற்றவாளிகளுடன் உடந்தை ( inaction and connivance) இவ்விரண்டும் கள்ளச்சாராயம் தலைதூக்குவதற்கான அடிப்படைக் காரணங்கள். கள்ளச்சாராயத்தை ஒழிக்க முடியுமா என்ற கேள்விக்கு மாறுபட்ட கருத்துக்கள் இருக்கின்றன. ஆனால் நிச்சயமாக கட்டுப்படுத்த முடியும் – காவல்துறை ஒருங்கிணைந்த நடவடிக்கை மேற்கொண்டால் உதாரணமாக, கள்ளச் சாராய ஒழிப்பை ஒரு சவாலாக ஏற்று 1999–2001 ஆண்டுகளில் மதுவிலக்கு அமலாக்கத் திட்டம் வரையறுக்கப்பட்டது. தமிழகத்தில் உள்ள 12,618 கிராம பஞ்சாயத்துக்களில் அடங்கிய 17,292 தாய் கிராமங்களில் மதுவிலக்குக் குற்றங்கள் அதிகமாக உள்ள 2500 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டன. அவற்றில் 700 கிராமங்கள் மதுவிலக்கு கரும்புள்ளி கிராமங்களாக கணக்கெடுத்து, ஒவ்வொரு மாவட்டத்திலிருந்து ஒவ்வொரு மாதமும் ஐந்து கரும்புள்ளி கிராமங்கள், ஒவ்வொரு மாவட்டத்திலும் மதுவிலக்கு குற்றங்களிலிருந்து முற்றிலும் விடுவித்து 'வெண்புள்ளி' கிராமங்களாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்ப.ட்து. சராசரி ஒவ்வொரு மாதமும் நூற்றுக்கும் மேற்பட்ட கரும்புள்ளி கிராமங்கள் வெண்புள்ளி கிராமங்களாக மாற்றப்பட்டு, காவல்துறை மக்களின் நன்மதிப்பைப் பெற்றது. மதுரை, தேனி, விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி, தஞ்சை, நாகப்பபட்டினம், திருவாரூர், திருச்சி போன்ற மாவட்டங்களில் பெருவாரியான வெற்றி ஈட்டப்பட்டது. மதுவிலக்கு குற்றங்களை ஒழிப்பதற்கு கிராம விழிப்புணர்வு குழுக்கள் அமைத்து அவர்களின் ஒத்துழைப்பு மற்றும் மகளிர்

சங்கங்களின் ஒத்துழைப்பு இன்றியமையாதது. எடுக்கப்பட்ட முயற்சிகளை தொய்வின்றி ஸ்திரப்படுத்துதல் அந்த சரக காவல்துறையினரின் பொறுப்பு.

மதுவிலக்கு சட்டத்தை பாரபட்சமன்றி முறையாக அமல்படுத்துவது காவல்துறையின் முக்கிய பணி. மற்ற அரசுத் துறைகளான, வருவாய்துறை, பொதுப்பணித் துறை, வனத்துறையின் மூலம் தொடர்பு கொண்டு அந்தந்த இடங்களில் மதுவிலக்கு குற்றங்கள் நடவாமல் தடுப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும். தன் மானத்தை பணயம் வைக்காது இந்த முக்கிய பணியில் நேர்மையைக் கடைபிடிக்க வேண்டும். கள்ளச்சாராயத்தால், தமிழ்நாட்டு மக்கள் மாண்டு மடிய நேரிடா வண்ணம் தக்க பாதுகாப்பு அளிப்போம். கள்ளச்சாராயத்தை ஒழித்தேத் தீருவோம் என்ற சூளுரைக்கு ஏற்ப முழுமையாக சமுதாய நலனை மனதில் கொண்டு காவல்துறைனர் தம்மை அர்ப்பணிக்க வேண்டும்.

(ஆர். நடராஜ்)
கூடுதல் சிறைத்துறை இயக்குநர்.
சென்னை–8